### கோவை வருகை தரும் கழகத் தலைவர் -

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு சிறப்பான வரவேற்பு!

## தொண்டாமுத்தூர் அ.ரவி - தளபதி முருகேசன் - துரை.செந்தமிழ்ச்செல்வன் அறிக்கை!







கோவை, அக்.9-

கோவை மாவட்டச் செயலாளர்கள் தொண்டா முத்தூர் அ.ரவி, தளபதி முருகேசன், பொறுப்பாளர் துரை. செந்தமிழ்ச்செல்வன் ஆகியோர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :

தமிழ் மண், மொழி, மானம் காக்க ஓய்வறியா மல் உழைத்து, தமிழ்நாட்டு மக்களுக்காக பொன்னான திட்டங்களை செயல்ப டுத்தி, பொற்கால ஆட்சி நடத்தி வரும் திராவிட சூரி யன், திராவிட மாடல் அர சின் தமிழ்நாடு முதலமைச் சர், கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் இன்று (9.10.2025-வியாழக் கிழமை) காலை 9.00 மணி யளவில் சென்னையில் இருந்து விமானம் மூலம் கோவை விமான நிலையம் வருகை தர உள்ளார். காலை 9.45 மணியளவில் கோயம்புத்தூர் மாவட்டம், கொடிசியாவில் நடைபெ றும் உலக புத்தொழில் இயக்க மாநாட்டினை தொடங்கி வைத்து உரை ஆற்றுகிறார். காலை 11.00 மணியளவில், நெடுஞ்சா லைத் துறை சார்பில், அவி னாசி சாலையில் கோல்டு வின்ஸ் பகுதியில் உப்பிலிப் பாளையம் முதல் கோல்டு வின்ஸ் வரை 10.1 கி.மீ நீளத்திற்கு ரூ.1791.22 கோடி மதிப்பீட்டில் கட் டப்பட்டுள்ள ஜி.டி.நாயுடு உயர்மட்ட சாலையினை திறந்து வைத்து பொதுமக் கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கிறார். காலை 11.15 மணி அளவில் கோவை அரசு கலைக்கல்லூரியில் உயிர் அமைப்பு சார்பில், சாலை பாதுகாப்பு குறித்து, கல்லூரி மாணவ, மாணவி யர்களுடன் "உறுதி மொழி" ஏற்றல் நிகழ்ச்சியில் கலந்து கொள் கிறார். பின்பு நண்பகல் 12.00 மணியளவில், குறிச்சி சிட்கோ தொழிற்பேட் டையில் ரூ.126 கோடி மதிப்பீட்டில் தங்க நகை பூங்கா அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள வருகை தரும் கழகத் தலைவர் அவர்களுக்கு மண்டலப் பொறுப்பாளர், முன்னாள் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி தலைமையில், ஒருங்கிணைந்த கோவை மாவட்டக் கழகத்தின் சார் பில் மாபெரும் பிரம்மாண் ட மான வரவேற்பு அளிக் கப்படுகிறது என்று கோவை வடக்கு மாவட்டச் செயலா ளர் தொண்டாமுத்தூர் அ.ரவி, கோவை தெற்கு மாவட்டச் செயலாளர் தள பதி முருகேசன், கோவை மாநகர் மாவட்டப் பொறுப் பாளர் துரை.செந்தமிழ் செல்வன் ஆகியோர் தெரி வித்துள்ளனர்.




புதுக்கோட்டை வடக்கு மாவட்டம் அன்னவாசல் வடக்கு ஒன்றியம் வெள்ளனூர் சமுதாய கூடத்தில் நடைபெற்ற 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாமில் மாவட்ட கழக செயலாளர் வழக்கறிஞர் கே.கே.செல்லபாண்டியன் தீர்வு காணப்பட்ட உத்தரவுகளை பொதுமக்களிடம் வழங்கினார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர் ஆர்.ஆர்.எஸ்.மாரிமுத்து, அரசு வழக்கறிஞர் பூங்குடி சிவா, மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர் கோ. அண்ணாதுரை, ஒன்றிய மாணவரணி அமைப்பாளர் வெள்ளைச்சாமி, ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் லெட்சுமணன், வெள்ளனூர் குமாரசாமி, முட்டுக்காடு செல்வராஜ், திடீர் நகர் முருகேசன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் பல துறைகளைச் சார்ந்த அரசு அதிகாரிகள், பொதுமக்கள் திரளாக பங்கேற்று பயனடைந்தனர்.




## தி.மு.க. இளைஞர் அணி

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சுற்றுப்பயண அறிவிப்பு

மாண்புமிகு துணை முதலமைச்சரும், கழக இளைஞர் அணிச் செயலாளருமான திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அரசு மற்றும் கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்க, திருச்சி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களுக்கு இரண்டு நாள் சுற்றுப்பயணம் மேற்கொள்கிறார். அங்கு அவர் கலந்துகொள்ளும் நிகழ்ச்சிகளின் விவரம் வருமாறு:

09.10.2025 வியாழக்கிழமை

| நேரம் | நிகழ்ச்சி | இடம் |
|---|---|---|
| காலை 10.00 மணி | வேடசந்தூர் ஒன்றியச் செயலாளர் இரா.சாமிநாதன் இல்லத் திருமண விழா | வேடசந்தூர், திண்டுக்கல். |
| காலை 11.00 மணி | வேடசந்தூர் அரசு புதிய மருத்துவமனை திறப்பு விழா & நலத்திட்ட உதவிகள் வழங்குதல் | வேடசந்தூர் அரசு மருத்துவமனை, திண்டுக்கல். |
| மாலை 05.00 மணி | துறையூர் தொகுதிக்கு உட்பட்ட கிளை, வட்டச் செயலாளர் - பாக முகவர்கள் உள்ளிட்ட கழக நிர்வாகிகளுடன் கலந்துரையாடல். | ஏ.வி.எஸ். திருமண மண்டபம், துறையூர், திருச்சி. |

"அன்பகம்"
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 07.10.2025

கலைஞர் 100 1924 - 2023




# துறைமுகம் தொகுதியில் அறுசுவை உணவு வழங்கல்!

சென்னை, அக்.9-

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன் னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்க ளுக்கு காலை உணவு வழங் கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட் டத்தின் 230 ஆம் நாளான - கழகத்தலைவர் முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று (07.10.2025), துறைமுகம் கிழக்கு பகுதி: 1) வட்டம் 55அ, அம்மன் கோவில்தெரு, சடை யப்பன் தெரு சந்திப்பு. 2) துறை முகம் மேற்கு பகுதி

2) வட்டம் 57 அ, N.S.C.போஸ் சாலை, பத்ரியன் தெரு சந்திப்பு (பூக்கடை பஜார் முன்தினம் அருகில்) சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத் தையும் யாருக்காவும், எதற்கா கவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக் காக ஒன்றுபட்டு போராடு வோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!" என்ற உறு திமொழியை ஏற்று பொதுமக்க ளுக்கு காலை உணவு வழங்கினார்.


